கடலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.எம்.காந்திராஜ் பி.காம்., எம்.பி.ஏ.,

ந.க.எண்.3197/2024/எப்1

நாள். 22.07.2024.

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் – கடலூர் மாநகராட்சி – கடலூர் துறைமுகம் கரையேறவிட்டக்குப்பம், கிராமம், வார்டு எண்:3, பிளாக் எண்.:52, நகரளவு எண்:1992/1, 1993, 1994, 1995/2, 1996/1 & 2005/1 உள்ள 4.79 ஏக்கர் (19393.00 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க ஒப்புதல் கோரியது – ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை:

1.கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்ட தங்களின் மனு நாள்.20.03.2024.

2.கடலூர் மாவட்ட உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் கடித ந.க.எண். 6M2QCXX9/2024/TCP நாள். 23.04.2024ன்படி வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதி எண். ம.வ/ந.ஊ.உ.இ.(கமா) எண்.43/2024.

3. கடலூர் 2நி இணை சப்ரி தான பத்திர பதிவு ஆவண எண்.1950/2024 நாள்.16.04.2024

4. மனைப்பிரிவு ஒப்புதல் கோரிய இவ்வலுவலக தங்களின் விண்ணப்பம் நாள்.08.05.2024.

5. உதவி செயற்பொறியாளர், கடலூர் மாநகராட்சி அவர்களின் 12.07.2024ம் தேதிய குறிப்பு.

6. மாமன்ற முன் அனுமதி நாள்.18.07.2024.

உத்தரவு:-

பார்வை 1ல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர் துறைமுகம் கரையேறவிட்டக்குப்பம், கிராமம், வார்டு எண்:3, பிளாக் எண்.:52, நகரளவு எண்:1992/1, 1993, 1994, 1995/2, 1996/1 & 2005/1 உள்ள 4.79 ஏக்கர் (19393.00 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருவாளர்கள் 1.N.அன்பரசன், 2.J.ஞானசேகரன், 3.R.காளிதாஸ் 4.S.திருமுருகன் 5.V.வடிவேலன் மற்றும் S.துழாய்மௌலி(எ)தேவன் ஆகியோர்களின் விண்ணப்பித்ததின் பேரில், பார்வை 2ல் கண்டுள்ள உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.6M2QCXX9/2024/TCP நாள்.23.04.2024ன்படி **ம.வ/ந.ஊ.உ.இ.(கமா) எண்.43/2024** என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள் மற்றும் மூலைமுடக்குகள் 5614.20 ச.மீ, பூங்கா பரப்பளவு 1389.40 ச.மீ, மின்சாரத் துறைக்கு 'b' என ஒதுக்கீடு செய்யப்பட்ட 76.70 ச.மீ இடத்தையும், உள்ளாட்சிக்கு 'a' என ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு 70.20 ச.மீ இடத்தை கடலூர் 2நி இணை சப்ரி தான பத்திர பதிவு ஆவண எண்.1950/2024 நாள்.16.04.2024 –ன்படி மனுதாரர்களிடமிருந்து கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களால் இம்மாநகராட்சி ஆணையர்

Scanned with ACE Scanner

பெயரில், அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித் (UD4(1)) துறை நாள். 09.12.2020ன்படி தானமாக பெறப்பட்டு இம்மாநகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண்.GO(MS)No.181 நாள் 09.12.2020ன்படியும் TNCDBR -2019 விதி 47 (11)ன்படியும் மனுதாரரால் வரைபடத்தில் கண்டுள்ளபடி அடிப்படை வசதிகளான தார் சாலை, மழைநீர் வடிகால், சிறு பாலங்கள் ஆகியவைகள் உரிமையாளரால் தனது சொந்த செலவில் முறையாக செய்து முடிக்கப்பட்டு, தரச்சான்று சோதனை அறிக்கை கடித எண்கள்.PMC-11-08/Civil/CS/2024, PMC-11-09/Civil/CS/2024, PMC-11-10/Civil/CS/2024 நாள்.12.07.2024ல் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி பண்ருட்டி, அமைப்பியல் துறையின் மூலம் பெறப்பட்டுள்ளது என்றும், தெருவிளக்கு 25 எண்கள் அமைத்திட மாநகராட்சி மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு ரூ.3,36,760/– பணம் செலுத்தப்பட்டு அதன் ரசீது சமர்பிக்கப்பட்டுள்ளது என 12.07.2024ம் தேதிய பொறியில் பிரிவின் குறிப்பில் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் 1 ஏக்கருக்கு ரூ.7500/– வீதம் 4.79 ஏக்கருக்கு ரூ.37,500/– இம்மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் ரசீது சமர்பிக்கப்பட வேண்டும். இம்மனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள 106 மனைகளுக்கும் காலிமனை வரி விதித்து, அதன் ரசீதுகள் சமர்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் பார்வை 2ல் அளிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி.

22/7/24.

22/7/24

இணைப்பு:- மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்:-

திருவாளர்கள் 1.N.அன்பரசன், 2.J.ஞானசேகரன், 3.R.காளிதாஸ்
4.S.திருமுருகன் 5.V.வடிவேலன் மற்றும் S.துழாய்மௌலி(எ)தேவன்
நெ.30 காமராஜ் வீதி,
கதிர்காமம், புதுச்சேரி.

நகல்:-

1) உதவி இயக்குநர் கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
2)உதவி இயக்குநர், (நில அளவை) கடலூர் மாவட்டம்.
3) சார் பதிவாளர், கடலூர் சார் பதிவாளர் அலுவலகம், இணை எண்.1, கடலூர் மாவட்டம்.
4)மாநகராட்சி பொறியாளர்– மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு மற்றும் சாலைகள் விவரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்ய.
5)உதவி வருவாய் அலுவலர், கடலூர் மாநகராட்சி – காலி மனை வரிவிதிப்பிற்காக.

Scanned with ACE Scanner


கடலூர் மாநகராட்சி

ந.க.எண்: 3197 /2024 /அ1 /நாள்: 22.07.2024

கடலூர் உள்ளூர் திட்ட குழும திட்ட அனுமதி எண் மற்றும் ம.வ./ந.ஊ.இ. (உ.தி) எண்: 43/2024ன் தொழில் நுட்ப ஒப்புதலில் கண்ட மனைபிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்ட மனைபிரிவு அனுமதித்து உத்திரவு வழங்கப்படுகின்றது.

ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி.

22/7/24.



Signature valid

Signed by: Assistant D[illegible]r
Location: Cuddalore[illegible]
Date: 2024.04.23 1[illegible]02

அளவர்/உதவி வரைவாளர்

வரைவாளர் நி[illegible]

மேற்பார்வையாளர்/[illegible]

Scanned with ACE Scanner